# ஜனவரி – 08 – செவ்வாய்

## தூய அப்பொலினாரிஸ்

**கடவுளே, அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை வழங்கும் ஆற்றலை அளியும்: திபா. 72:1**

**முதல் வாசகம் : 1 யோவான் 4 : 7 – 10**

அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார். நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

**பதில்பாடல் :** ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு
ஊழியம் செய்வார்கள்.

**நற்செய்தி : மாற்கு 6 : 34 – 44**

அக்காலத்தில் இயேசு படகிலிருந்து கலிலேயாக் கடற்கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார். இதற்குள் நெடுநேரமாகிவிடவே, சீடர் அவரிடம் வந்து, ”இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே, ஏற்கெனவே நெடுநேரம் ஆகிவிட்டது. சுற்றிலுமுள்ள பட்டிகளுக்கும் ஊர்களுக்கும் சென்று உண்பதற்கு ஏதாவது அவர்களே வாங்கிக்கொள்ளுமாறு நீர் மக்களை அனுப்பிவிடும்” என்றனர். அவர் அவர்களிடம், ”நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்” என்று பதிலளித்தார். அவர்கள், ”நாங்கள் போய் இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கி இவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும் என்கிறீரா?” என்று கேட்டார்கள். அப்பொழுது அவர், ”உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன? போய்ப் பாருங்கள்” என்று கூற, அவர்களும் பார்த்து விட்டு, ”ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன” என்றார்கள். அவர் எல்லாரையும் பசும்புல் தரையில் அமரச் செய்யும்படி சீடர்களைப் பணித்தார். மக்கள் நூறு பேராகவும், ஐம்பது பேராகவும் வரிசை வரிசையாய் அமர்ந்தனர். அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறுவதற்காகத் தம் சீடரிடம் கொடுத்தார். அவ்வாறே அந்த இரு மீன்களையும் எல்லாருக்கும் பகிர்ந்தளித்தார். அனைவரும் வயிறார உண்டனர். பின் எஞ்சிய அப்பத் துண்டுகளையும் மீன் துண்டுகளையும் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர். அப்பம் உண்ட ஆண்களின் தொகை ஐயாயிரம்.

**தியானம்:** எவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்கிறீர்கள் என்பதற்கு, இவ்வளவாய் என்று தன் கரங்களை சிலுவையில் விரித்து எமக்காக தனது உயிரை கொடுத்த கிறீஸ்துவின் அன்பிற்கீடாக இந்த உலகத்தில் ஏதுவுமில்லை. இன்று அன்பு என்றால் என்ன? அதை எங்கு பெற்றுக்கொள்ளலாம்.? என்று அலையும் மனிதர்கள் பலர். குழந்தைகளை விட தொழிலும் பெற்றோரை விட பணமும் இன்று மனிதர்களுக்கு பெரிதாகிவிட்டன. அன்பும் அமைதியும் உறவும், இல்லாத அவசர வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்றைய முதல் வாசகம் நீ உன் மீது அன்பு கூருவது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூரும்படி எம்மை அழைத்து நிற்கின்றது. இன்றைய நற்செய்தி வாசகத்தில் பெருந்திரளான மக்கள் இயேசுவை தேடிச்செல்கிறார்கள். இயேசு அவர்கள் பலரை குணமாக்கினார். எல்லோருக்கும் பசி தீர உணவளித்தார். மக்கள் எல்லாரும் இயேசு செய்த புதுமைகளைக் கண்டு ஆர்ப்பரித்தார்கள். இயேசு அவர்களிடம் என்னைத் தேடுவது அருங்குறிகளைக் கண்டதாலா? அல்லது அப்பங்களை வயிராற உண்டதாலா? அழிந்து போகும் உணவிற்காக உழைக்க வேண்டாம் அழியாத வாழ்வதரும் உணவிற்காக உழையுங்கள் என்று எம்மிடம் அழைப்புவிடுக்கின்றார். நமக்காக வாழந்தால் நாம் மனிதரல்ல நாமும் வாழ்ந்து மற்றவர்களையம் வாழவைத்தால்தான் நாம் உண்மை மனிதர்கள். அன்னை திரேசா ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டார். தன்னை எவன் அன்பு செய்கிறானோ அவனே பிறரை அன்பு செய்வான் எனவே புதிய ஆண்டில் எம்மை சூழவுள்ள அனைவருடனும் எம் அன்பைப் பகிர்ந்துவாழ இறைவனிடம் வரம் வேண்டுவோம்.